**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 10.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 47/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-6 |
| **சாட்சியின் பெயர்** | : | நரேந்திரன் |
| **தந்தை பெயர்** | : | கருப்பையன் |
| **கிராமம்** | : | திருக்கண்ணமங்கை |
| **தாலுக்கா** | : | திருவாரூர் |
| **தொழில்** | : | பூக்கடை |
| **வயது** | : | 60 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் அம்மையப்பன் என்ற ஊரில் பூக்கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா-1 ரவி என்பவரையும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டு கையொப்பமும் என்னுடையது இல்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த

சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 06.08.2022 ஆம் தேதி அ.சா-1-யை மருத்துவமனைக்கு சென்று பார்த்துவிட்டு திரும்பி 11.30 மணிக்கு கடை தெருவிற்கு வரும் போது திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடமான R.R காம்ளக்ஸ் அருகே நின்று சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததாகவும், பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் பார்வை மகஜரில் நானும் நாகலிங்கம் மகன் கர்ணன் என்பவரும் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் இட்டதாகவும், அப்போது அங்கு உடைந்து கிடந்த ஷோக்கேஸ் கண்ணாடி துண்டுகள் மூன்று மற்றும் பாத்ரூமில் உடைந்து கிடந்த வெள்ளை நிற டேப் ஒன்றை கைப்பற்றியதாகவும் அதில் நீங்கள் இருவரும் கையொப்பம் இட்டதாக திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளை காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.10 16:24:21 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.